**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**2026 - ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24- ம் நாள் செவ்வாய்கிழமை**

**திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : ராஜேஸ்குமார் | அசல் வழக்கு எண்:16/2024 |
| த/ பெயர் | : சின்னையா | வாதி தரப்பு சாட்சி எண். 2 |
| வயது | : 43/2026 | |
| கிராமம் | : அய்யர்பாடி எஸ்டேட் | |
| வட்டம் | : வால்பாறை | |
| சமயம் | : | |
| தொழில் | : ஓட்டுநர் | |

**முதல் விசாரணை**

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரமும், கூடுதல் ஆணையுறுதிப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பிராம்சரி நோட் நான் எழுதியது தான். அதில் எழுதியதும், சாட்சியும் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு மாசிலாமணியை தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் எத்தனை மணிக்கு வா.சா.ஆ.1 புரோ நோட்டை எழுதினேன் என்றால் 03.12.2021-ம் வருடம் மாலை 04.00 – 05.00 மணியிருக்கும் எழுதினேன். எனக்கு பிரதிவாதியை யார் என்று தெரியாது என்றாலும், வாதியிடம் மாசிலாமணியை பணம் வாங்கவில்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ.1,00,000 /-ம் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் வாதி மாரியப்பனுடன் ஓட்டுநராக வேலை செய்து வருவதால் அவருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவரிடம் ஓட்டுநராக வேலை செய்யவில்லை நான் தனியாக டாக்சி வைத்து ஓட்டி வருகிறேன். அவ்வப்போது என்னை அழைப்பார்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.